மின்னும் நக்ஷத்திரங்கள்

(முதல் தொகுப்பு)

★

விற்பனை உரிமை:
பேசும்படம்
188, ராயப்பேட்டை, ஹைரோடு,
சென்னை 14.

மின்னும்

271

நக்ஷத்திரங்கள்



NW
N47
11354ல

விலை ரூ. இரண்டு

முதற்பதிப்பு: நவம்பர் 1947.

விலை ரூபாய் இரண்டு.

அட்டையில்:

சித்ரகலாவின் தாய்நாடு படத்தில் ஒரு காட்சி

பாட்லிங் மணியும், சுந்தரியும்.

இந்த அழகிய பதிப்பு வெற்றி
யடைந்து, ரஸிகர்களின்
ஆதரவையும் அமோகமாகப்
பெற்றுவிட்டால், அந்தப்
பெருமை முழுவதையும்
அஜந்தாக் கனவுகள் காணும்
என் துணைவன் கே. ஸ்ரீக்கு
சேர்ப்பித்து விடுகிறேன்.

— சிரஞ்சீவி

"பேசும்படம்"
12. 11. 47

பி. யூ. சின்னப்பா

ஒரு கம்பீரமான புன்சிரிப்புடன் காக்ஷியளிக்கிருரே, அவரைப்பற்றி நான் உங்களுக்கு அதிகம் சொல்ல வேண்டியதில்லே. தமது ஏழாவது வயதிலேயே மேடையிலேறி, மாதம் பதினைந்து ரூபாய்க்கு மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் ஒரு நடிகனுக ஒப்பந்தம் செய்து கொண்டார். 'பாதுகா பட்டாபிஷேக'த்தில் இவர் பரதனுக நடிப்பதைக்காண ஆயிரம் கண்கள் வேண்டும். ஜூபிடர்ஸாரின் 'சந்திரகாந்தா'வில் போட்ட வேஷத்துடன் சினிமா உலகில் காலடி வைத்த இவர், இன்று சினிமா வானில் முதல்தர நக்ஷத்திர வரிசையில் நிற்கிருர். 'கண்ணகி'யில் இவர் நடிப்பு கனஜோர். அந்த மாதிரி மறுபடியும் எப்போது நடிப்பார் என்றே நாம் ஏங்குகிறோம். நாடக பாணியை அளவுக்குமீறி உபயோகிப்பதால் பூரண வெற்றி இவருக்கு இன்னமும் கிட்டவில்லே. தம் பூதஉடலுக்கு பூரணத்வம் அளிப்பதில் கவனத்தை குறைத்துக் கொண்டு, பாட்டுக்கும் நடிப்புக்கும் மெருகு தீட்டுவதில் முனைந்தாராளுல், முன்னணியில் நிச்சயம் நிரந்தரமாக அமர சுடர் வீசிக்கொண்டே நிற்கவேண்டிய நக்ஷத்திரம் இவர்.

நடித்தப்படங்கள்: சந்திரகாந்தா, பஞ்சாப் கேசரி, ராஜ மோஹன், அனுதைப் பெண், யயாதி, மாத்ரு பூமி, உத்தம புத்திரன், தயாளன், தர்மவீரன், பிருதிவிராஜன், மனேன் மணி, ஆர்யமாலா, கண்ணகி, ஜகதலப்ரதாபன், குபேர குசேலா, ஹரிச்சந்திரா, மஹாமாயா, அர்த்தநாரி, பங்கஜ வல்லி, துளசி ஜலந்தர், விகடயோகி.

நடித்துக்கொண்டிருக்கும் படங்கள்: மங்கையர்க்கரசி, மதுரை வீரன், ரத்னகுமார், கிருஷ்ணபக்தி, சுதர்சன்.

வயது 36.

டி. ஆர். ராஜகுமாரி

யாரை நீங்கள் மறந்தாலும் இந்த மயக்கு நக்ஷத்திரம் உங்கள் கண்களினின்றும், கருத்தினின்றும் விலகவே மாட்டார். பார்த்தவுடனேயே பரவசமூட்டும் மந்திர சக்தி ராஜகுமாரியினுடைய ஏகபோக உரிமை. 'கச்ச தேவயானி'யில் இவரை தீர்க்கதரிசி டைரக்டர் கே. சுப்ரமண்யம் இழுத்துப் போடுகையில், எல்லோரும் அவரைக் கண்டு கைகொட்டி சிரித்து 'போயும் போயும் இவள்தானா உங்களுக்கு அகப்பட்டாள்?' என்று கேலி செய்தனர். படம் வெளி வந்ததும், தமிழ் மக்கள் ராஜகுமாரி பித்துப் பிடித்து திரும்பத் திரும்ப அவள் நடித்த முதல்ப் படத்தை பார்த்ததும் பகிரங்க உண்மை. ராஜகுமாரி நடிக்காத படம் படமா என்றுகூட ரஸிக கோடிகள் ஒருமித்து கூவின காலமும் உண்டு. அதன் பின் ராஜகுமாரி எவ்வளவோ படங்களில் நடித்தாலும் தேவயானிபோல் இன்னமும் நடிக்கவில்லை என்பதும் மறுக்க முடியாத உண்மை. ஆனால் எது எப்படிப் போனால் என்ன? ராஜகுமாரி பைத்தியம் பிடித்த ரஸிகர்கள் அவள் முகத்தை தரிசிக்க கட்டுச்சாதம் கட்டிக்கொண்டு மைல்க் கணக்காக நடக்க தயாராக இருக்கும் வரை, அவர் புகழுக்கு தேய்வு ஏது?

நடித்தப்படங்கள்: கச்சதேவயானி, சதி சுகன்யா, குமார குலோத்துங்கன், மந்தாரவதி, சூர்யபுத்ரி, மனோன்மணி சிவகவி, குபேரகுசேலா, பிரபாவதி, ஹரிதாஸ், சாலிவாஹணன், வால்மீகி, பங்கஜவல்லி, விஸ்வாமித்ரா, விகட யோகி.

நடித்துக்கொண்டிருக்கும் படங்கள்: சந்திரலேகா, கிருஷ்ணபக்தி.

வயது 25.

பானுமதி

"ஹோ.......ஹோ.......ஹோ.......ஹோ.....ஓ.....ஓ பௌரமா!" என்று எவர் உள்ளத்தையும் பதற அடிக்கும்படி பாடிக்கொண்டு வந்து, நடிகர் நாகையாவையும் தன் சௌந்தர்ய வலையில் சிக்க வைத்தாரே, அந்த விஷகன்னிகைதான் இவர். கண்களில்தான் என்ன கவர்ச்சி! முகத்தில்தான் என்ன பொலிவு! நக்ஷத்திர உலகில் இவர் வெகு விரைவில் தடக்கென்று ஒரு அழியா ஸ்தானத்தை ஸ்வீகரித்துக் கொண்டு விட்டார். புதிதாங்கு நக்ஷத்திரமானாலும், இவரை நீங்கள் 'ராஜ யோகி'யிலும், 'ரத்னமாலா'விலும் சந்தித்து குதூகலிக்கப் போகிறீர்கள். தானே ஒரு கம்பெனி ஏற்படுத்தி, தன் கணவனையே டைரக்டராகப் போட்டுக் கொண்டு, 'ரத்னமாலா'வை வெளியே கொண்டு வருகிறார். ஆங்கிலத்தில் நல்ல தேர்ச்சி உண்டு. அழகாகப் பேசுகிறார். 'கலைத் தொண்டு புரியவே சினிமாவில் புகுந்தேன். எனக்கு ரொம்பப் பிடித்தது கதை எழுதுவதும், இலக்கிய சஞ்சாரமும்' என்று கூறி இவர் ஒரு மோகனப் புன்னகை சிந்துகையில், ரஸிக கோடிகள் இந்த தேவதையின் அடிமைகளாக மாறின மர்மம் பளிச்சென்த் தெரியவில்லையா?

நடித்தப்படங்கள்: வரவிக்ரயம், மாலதி மாதவம், தாம்பத்னி, பக்திமாலா, கிருஷ்ணபிரேமா, கருடகர்வபங்கம், தாஸில்தார், ஸ்வர்க்க ஸீமா, கிரஹப்ரவேசம்.

நடித்துக்கொண்டிருக்கும் படங்கள்: ரத்னமாலா, புலந்திரன், சுதர்ஸன், ராஜமுக்தி.

வயது 23.

குமாரி ருக்மணி

மாநிறம், குறு குறுப்பான பார்வை, கட்டு மஸ்தான திரேகம்—ரஸிக கோடிகளை மயக்க இன்னமும் என்ன வேண்டும்? 'ஸ்ரீ வள்ளி'யாகத் தோன்றி பட உலகில் ஒரு பரபரப்பை ஏற்படுத்திய குமாரி ருக்மணி எடுத்த எடுப்பிலேயே புகழுக்கு பாத்திரமாக வில்லை. வட இந்திய பிரபல நடிகை ஜொஹரா ரஞ்ஜன். அவள் ஆடிய நாட்டியத்தை அப்படியே தத்ரூபமாய் ஆடிக் காண்பித்த இச்சிறுமியை அணைத்து முத்தமிட்டு 'ருக்மணி, நீயும் என்னைப்போல் பிரபல நடிகை ஆகவேண்டும்' என்று அன்று கூறியது பொய்யாகவில்லை. விளையும் பயிர் முளையிலேயே தெரியுமல்லவா? 'லோகிதாஸ்'ஞக பட உலகில் பிரவேசித்த இவர் 'லவங்கி'யில் திறம்பட நடித்துவிட்டு, தம் வருங்காலத்தை டைரக்டர் ஒய். வி. ராவிடம் ஒப்படைத்திருக்கிறார். ராவின் 'டச்'சுக்கே ஒரு தனி மகிமை உண்டு. 'ராமதாஸ்' இவருக்கு நிரந்தர புகழ் தேடிக்கொடுக்கும். ஏழு பாஷைகளில் அநாயசமாகப் பேசுகிறார். அற்புதமாக நடனம் ஆடுகிறார். ஒரு மகோன்னத நக்ஷத்திரமாக ஜ்வலிக்க வேண்டிய காலம் வெகு விரைவில் இவரை நெருங்குகிறது.

நடித்தப்படங்கள் : சீதா வனவாசம், லலிதாங்கி, ஹரிச்சந்திரா, மாயாபஜார், ஜலஜா, வாலிபர் சங்கம், தமிழ்த்தாய், பாக்ய லீலா, பூலோகரம்பை, தேசிங்குராஜன், பாலயோகினி, தேசமுன்னேற்றம், பக்தகுமணன், ஜயபாரதி, பரசுராமர், ரிஸ்ய சிருங்கர், பக்த நாரதர், ஸ்ரீ வள்ளி, லவங்கி, பங்கஜ வல்லி.

நடித்துக்கொண்டிருக்கும் படம் : பக்த ராமதாஸ்.

வயது 20.

டி. ஆர். மகாலிங்கம்

'நாம் இருவர்' என்ற படம் தமிழ்நாடு எங்கும் சக்கை போடு போட்டுக் கொண்டு திக்விஜயம் செய்து வருவதற்கு மூலகாரணங்களில் மகாலிங்கத்தின் அதிஅற்புத கானமும் ஒன்று. 'கிட்டப்பாவின் அவதாரம் இவன்தானப்பா' என்று எல்லோரும் ஒருமித்து அலறும்படி செய்து விட்டது இவருடைய கர்ணாமிர்த பாட்டுகள். ஒன்பது வருஷங்களுக்கு முன் வந்த 'நந்த குமாரில் இவர் 'புகதர்ம முறையே' என்ற பாட்டைப் பாடிக்கொண்டு திரையில் தோன்றியதும், தியேட்டரில் இருப்போர் எல்லோருக்கும் மயிர்க் கூச்சலெடுத்தது என்பது பிரசித்தம். புகழ் திடீரென்று அன்று ஏற்பட்டதற்கு திருஷ்டிக் கழிவு போல், இவர் 'ஸ்ரீ வள்ளி' வெளியே வரும்வரை அஞ்ஞாதவாசம் புரிய நேர்ந்தது. பல படங்களில் தோன்றினாலும் இவர் சோபிக்கவில்லை. முருகனாகத் தோன்றி, எல்லோர் மகிழ்வையும் மீண்டும் பெற்று விட்டார். சகடயோகம் ஆரம்பித்து விட்டது மகாலிங்கத்திற்கு. இன்று இவருக்கு ஏக கிராக்கி. 'நாம் இருவர்' இவரை புகழின் உச்சாணிக் கிளையில் ஏற்றி விட்டது. 'வேதாள உலகம்' 'புலந்திரன்' முதலிய படங்கள் மூலம் இவர் அமோக கீர்த்தி பெறுவார் என்பதில் சந்தேகமே இல்லை.

நடித்தப்படங்கள்: நந்தகுமார, பிரஹலாதா, சதிமுரளி, வாமனவதாரம், பரசுராமர், பூலோகரம்பை, தயாளன், மாயாஜோதி, சதிசுகன்யா, மனோன்மணி, ஜோதிமலர் (தாசிப்பெண்) பக்தஹநுமான், ஸ்ரீவள்ளி, நாம் இருவர்.

நடித்துக்கொண்டிருக்கும் படங்கள்: வேதாள உலகம், வி-3, ஞானசௌந்தரி.

வயது 23.

அஞ்சலி தேவி

'கொல்லபாமா' என்ற தெலுங்குப்படம் பட உலகில் ஒரு புரட்சி ஏற்படுத்திவிட்டது. ஒரு அழகி முழுக்கு முழுக்க ரஸிகர்களின் கவனத்தை ஆகர்ஷிக்க முடியும் என்ற மாபெரும் உண்மையை நிலைநாட்டி விட்டது. தேவ மோஹினியாகத் தோன்றிய இந்த அஞ்சலி, அந்த ராஜகுமாரனை படுத்திய பாட்டையும், அவன் உள்ளத்தைக் கவர, மோக வலையை எத்தனை நிதானமாகவும், சாதுர்யத்துடனும், கவர்ச்சிகரமாக வும் விரித்து மன்னனை அதில் சிக்கவைத்து அவனை என்ன பாடுபடுத்தினுள் என்பதையும் நாம் மணிக் கணக்காக அலுப்பின்றி பார்த்துக்கொண்டே இருந்தோம். அவள் திரையில் தோன்றினவுடனே, நாமும் பூலோக வாசிகள் என்பதை மறந்து, மன்னனை அவள் இழுத்துச் செல்லும் மோகாந்தர ஸ்தலங்க ளுக்கு மெய்மறந்து நாமும் செல்கிறோம். இத்தனைக் கும் அஞ்சலி உதயதாரகைதான். முதன் முதலில் திரையில் தோன்றும் பரவச தெய்வம். கவர்ச்சிகர மான முகமும், எடுப்பான உடலும் இருந்தால், எந்த ரஸிகர்தான் தம் உள்ளத்தை கொள்ளை கொடுக்கா மல் பாதுகாக்க முடியும்? இந்த மயக்கு நக்ஷத் திரம் 'மகாத்மா உதங்கரில்'த் தோன்றுகிறார். தமிழ்ப் பட உலகம் இவர் பிரவேசத்தால் புதியதோர் துறை யில் முன்னேறுகிறது.

நடித்தப்படம்: கொல்லபாமா.

நடித்துக்கொண்டிருக்கும் படம்: மகாத்மா உதங்கர்.

வயது 22.

எம். வி. ராஜம்மா

தமிழ்ப் படத்திலும் கன்னடப் படத்திலும் நடித்து அமோக புகழ் பெற்ற இரு நக்ஷத்திரங்களில் ராஜம்மா ஒருவர். மைசூரைச் சேர்ந்த ராஜம்மா நாடக மேடை நடிப்பில் நல்ல பெயர் எடுத்து, 1936-ம் வருஷம் 'சம்ஸார நௌகா'வில் நடித்து பிரமாதமான கீர்த்தி பெற்று விட்டார். அவருடைய வெற்றிக்குக் காரணம் அவருடைய சிறந்த சங்கீத ஞானம். அதன்பின் அந்தக்காலத்தில் பிரக்யாதி பெற்ற மஹமதுபீருடன் சேர்ந்து நடித்து நிரந்தர புகழ் அடைந்தார். தமிழ்ப் பட உலகில் பிரவேசித்து, 'உத்தம புத்திர'னிலும் 'குமஸ்தாவின் பெண்'ணிலும் நடித்தார். இவ்விரு படங்களும் இவருக்கு நிரம்பப் புகழ் தேடிக் கொடுத்தன. அதன்பின் இவர் தோன்றிய படங்களிலெல்லாம் அவ்வளவாக சோபிக்கவில்லை. ஆனல் 'விஜய லக்ஷ்மி'யில் சுமாராக பெயர் கிடைத்தது தற்பொழுது இவர் 'கோகுலதாஸி', ஞானசௌந்தரி, 'அம்பிகா தேவி' முதலிய படங்களில் நடித்து வருகிறார். அதிக சிரத்தையுடன் இவர் நடித்து வருவதால், இழந்த புகழை மீண்டும் பெறலாம். நல்ல முகவெட்டும், கவர்ச்சிகரமான கண்களும் உடைய ராஜம்மா நல்ல முயற்சி எடுத்துக்கொண்டால், எதிர்காலத்தில் மேலும் மேலும் கீர்த்திபெற்று விளங்குவார் என்றே நம்புகிறேன்.

நடித்தப்படங்கள் : சம்சார நௌகா (கன்னடம்) கிருஷ்ண ஜாரசந்தா, யயாதி, உத்தமபுத்திரன், குமஸ்தாவின் பெண், மதனகாமராஜன், அனந்தசயனம், ராதாரமணு, மாயா லோகம், அர்த்தநாரி, விஜயலக்ஷ்மி, யோகிவேமனு.

நடித்துக்கொண்டிருக்கும் படங்கள் : ஞானசௌந்தரி, கோகுல தாஸி, அம்பிகாதேவி.

வயது 27.

என். ஸி. வஸந்தகோகிலம்

ரேடியோ பெட்டியைத் திருப்பியவுடன் மந்த மாருதம் வீசுவதுபோல் ஒரு மதுரமான குரல் தொனித்தவுடன் நாம் எல்லையற்ற குதூகலத்தில் ஆழ்ந்து விடுகிறோம். வஸந்தத்தின் குளுமையையும் குயிலின் இனிமையையும்பிணைத்து ஒருதெய்வீகநாதம் அளிக்கும் இவரை அறியாத தமிழன் இன்று இல்லை. 'எப்போ வருவாரோ' என்ற பாட்டு இவரால்த்தான் மிதமிஞ்சிய பிரசித்தி அடைந்து விட்டது என்றுகூட சொல்லலாம். இந்த 'மதுரகீதவாணி' சினிமா உலகில் நக்ஷத்திரம் என்ற பெயர் சூட்டிக்கொண்டார் என்றால், அது அவர் நடிப்புக்கோ, தோற்றத்துக்கோ நாம் அளித்த கௌரவம் அல்ல. அவருடைய அதி அற்புத கானத்திறனே இதற்குக் காரணம். 'வேணு கானத்'தில் இவர் பொழிந்திருக்கும் கானமழை ரஸிகர்கள் கவனத்தை கவர்ந்தது. ஆனால் 'ஹரிதாஸ்' இவருக்கு நல்ல புகழ் சம்பாதித்துக் கொடுத்து விட்டது. 'பக்தசபரி'யில் இவர் தோன்றி அதை தமிழ் நாட்டுக்கு தம் சங்கீத பரிசாக அளிப்பார் என்றே நம்புகிறோம். பல படங்களில் தோன்றி, இருக்கும் பெயரையும் கெடுத்துக்கொள்ளாமல், 'பக்த சபரி'யை ஒரு அற்புதமான சங்கீதப் படமாக்குவதில் இவர் அதிக கவனம் செலுத்துவாரானால், ரஸிகர்கள் இவரை நிச்சயம் போற்றுவார்கள்; மறக்கவே மாட்டார்கள்.

நடித்தப்படங்கள் : சந்திரகுப்த சாணக்யா, வேணுகானம், கங்காவதார், ஹரிதாஸ், வால்மீகி, குண்டலகேசி.

வயது 26.

கண்ணாம்பா

எத்தனை முறை பார்த்தாலும் சலிப்பை யுண்டு பண்ணாதபடம். பசுபலேட்டி கண்ணாம்பா நடித்த 'கண்ணகி'தான். ஒரு ஆந்திர நடிகை இத்தனை அற்புதமாக ஒரு தமிழ்ப் படத்தில் ஆவேசத்துடன் நடிக்கிறாரே என்று எல்லோரும் ஆச்சர்யப்பட்டனர். திரை உலகில் திடீரென்று காலடிவைத்து புகழேணியின் உச்சிக்குப் பாய்ந்து விடவில்லை இந்நடிகை. நடிப்புக் கலையில் இருபதுவருஷ அனுபவம் இவருக்கு. இவர் நாடகத்தில் சேர்ந்ததே ஒரு பெரியகதை. 'ஹரிச்சந்திரா' நாடகம் நடந்துகொண்டிருந்ததாம். சந்திரமதியாகத் தோன்றியவரின் சோகநடிப்பு சப்பென்றிருக்கவே, முன் வரிசையில் வீற்றிருந்த கண்ணாம்பா, ஆத்திரத்துடன் எழுந்து மேடையில் ஏறி, தானே மெய்மறந்து நடித்தாராம். எல்லோரும் பிரமித்துப் போயினர். அன்று ஆரம்பித்த பிரவேசம் இன்று அவரை முன்னணியில் நிறுத்திவிட்டது. 'அசோக்குமார்'லும் 'மஹாமாயா'விலும் அற்புதமாக நடித்திருக்கிறார். மற்றொரு 'கண்ணகி' நடிப்பை ரஸிகர்கள் எதிர்பார்க்கிறார்கள். இவர் ரஸிகர்கள் ஆசையை பூர்த்தி செய்வாரா?

நடித்தப்படங்கள்: ஹரிச்சந்திரா, திரௌபதி வஸ்திராபரணம், சண்டிகா, போஜராஜன், கிருஷ்ணன் தூது, தல்லிபிரேமா, சுமதி, அசோக்குமார், கண்ணகி, தமிழ் ஹரிச்சந்திரா, பாதுகா பட்டாபிஷேகம், மாயா லோகம், மாயாமச்சீந்திரா, மூன்று மராத்திகள், மஹாமாயா, துளஸி ஜலந்தர், தெய்வநீதி.

நடித்துக்கொண்டிருக்கும் படம்: மங்கயர்க்கரசி.

வயது 31.

புஷ்பவல்லி

நக்ஷத்திரப்பதவி அடைவதற்கு நடிப்பு எத்தனை அநுசரணையாக இருக்கிறதோ அதேபோல் மற்றொன்று உண்டு என்பதை நேயர்கள் அறிவார்கள். அதுதான் 'அழகு' என்று நான் உங்களுக்கு கூற வேண்டிய அவசியமில்லை. இது மட்டும் ஒரு நடிகையிடம் பூரணமாயிருந்தால், அந்த நடிகையை எந்தப் பட முதலாளியும் கொத்திக்கொண்டு போய்விடுவார் என்பதும் பிரசித்தம். இந்த ரேஷன் காலத்தில் அந்த அழகியைப் பார்த்துக் கொண்டேயிருந்தால் பசி தீர்ந்துவிடுமே. 'தாஸி அபரஞ்சி'யில் தாஸி வேஷத்தை தத்ரூபமாய் நடித்து நக்ஷத்திரப் பதவி அடைந்த புஷ்பவல்லி திரை தெய்வமாகவிளங்குமட்டும் ரஸிகர்கள் நெஞ்சு காய வேண்டிய நிர்பந்தமில்லை. அந்த வேஷத்துக்குத்தான் பிரம்மா அவரை சிருஷ்டித்தாரோ என்று உங்களில் பலர் அதிசயித்தீர்கள். இப்பொழுது தமிழகம் எங்கும் சக்கைபோடு போட்டுக்கொண்டிருக்கும் 'மிஸ் மாலினி'யின் தரிசனம் கிட்டும் பாக்கியம் உங்களுக்கு பரிபூரணமாக ஏற்பட்டிருக்கிறது. பெரிய இடத்தில் பிறந்த இந்த மகா அழகி, ஒரு படிப்பாளியை மணந்தும் சினிமாத்துறையில் ஏன் இறங்கினார் என்றால், இந்தக் கலைமீது அவர் கொண்டிருக்கும் அபரிமிதமான பற்றுதலே காரணம். புகழ் வளர வளர இவர் சரீரமும் அமோகமாக வளர்ந்துவிட்டதே என்று நீங்கள் கவலைப்பட்டு என்ன செய்வது? அது அவருக்கல்லவா தெரியவேண்டும்?

நடித்தப்படங்கள்: சம்பூர்ண ராமாயணம், சல்மோஹணரங்கா, மோஹினி பஸ்மாசுரா, வரவிக்ரயம், தசாவதாரம், மாலதி மாதவம், தாராச்சாங்கம், சூடாமணி, சத்தியபாமா, பால நாகம்மா, தாஸி அபரஞ்சி, பாதுகா, மிஸ் மாலினி.

வயது 25.

எம். எஸ். சுந்தரிபாய்

"வேலைக்கார கேலிப் பிழைப்பு வெளியே சொன்னால் வெக்கம்; அதை நினைக்க நினைக்க துக்கம்" என்று ஒருவர் பாடினதை உங்களால் என்றென்றும் மறக்க முடியாது. இதைப் பாடியவர்தான் சுந்தரிபாய்; தற்போது 'மிஸ் மாலினி' யில் பிரமாதமாக ஆடிப்பாடி தமிழர் உள்ளத்தை பரவசப்படுத்திய முன்னணி நட்சத்திரம். 'காபியாஸ்பரின்' விளம்பரப் படத்தின் மூலம் ரஸிகர்களுக்கு அறிமுகமான சுந்தரி (இவருடைய பெற்றோர்கள் எத்தனை முன் யோசனையுடன் இவருக்கு இந்தப் பெயரை சூட்டியிருக்கிறார்கள்) ரெயில்வே கார்ட் ஸ்ரீராமராவின் புத்திரி. வயது 24 கூட ஆகாத இவர், வெகு விரைவில் நக்ஷத்திரப்பதவி அடைந்துவிட்டார். 'தாஸி அபரஞ்சி'யில் இவர் நடிப்பு பிரமாதமாக சோபிக்கவே, 'கண்ணம்மா என் காதலி' என்ற படத்துக்கு கதாநாயகியாக நடிக்க ஏற்பாடு செய்தார்கள். தனக்குக் கிட்டிய சான்ஸை நல்ல முறையில் பயன் படுத்திக்கொண்ட இவர், 'மிஸ் மாலினி'யில் தம் பாட்டையும் நடிப்பையும் எவராலும் மறக்க முடியாதபடி செய்துவிட்டார். இன்னும் பல படங்களில் தோன்றி ரஸிக கோடிகளின் உற்சாகத்துக்கு ஜீவ ஊற்றாக விளங்குவார் என்று நினைக்கிறேன்.

நடித்தப்படங்கள்: சுகுண சரஸா, தானசூரகர்ண, சூர்ய புத்ரி, மதனகாமராஜன், பக்த நாரதர், நந்தனர், தாஸி அபரஞ்சி, கண்ணம்மா, என் காதலி, மிஸ் மாலினி.

நடித்துக்கொண்டிருக்கும் படம்: சந்திரலேகா.

வயது 24.

வசுந்தரா

இப்படித் தோற்றம் அளிக்கிறாரே, இவர் குறத்தி அல்ல: ஒரு காவலன் உள்ளத்தை வென்ற துணிச்சலான காரிகை. நாடோடிப் பெண்ணல்ல: நடிப்பில் ஒரு புரட்சி ஏற்படுத்திய பிரபல நக்ஷத்திரம் இவருடைய நடிப்பு அதன் சிகரத்தை ஜெமினியின் 'மங்கம்மா' மூலம் அடைந்தது. வசுந்தரா 'மங்கம்மா' வில் இந்த வேஷத்தில் தோன்றி ஆடின ஆட்டத்தையும் பாடின பாட்டையும் ரஸிக்க, நம்மில் பலர் பல முறை அந்தப் படத்தை திரும்பத் திரும்ப பார்த்தோம். "என் கண்ணைப்பார், என் காலைப்பார்" என்று பாடிக்கொண்டே நம்மை கிறு கிறுகச் செய்த இந்த நடிகையின் அட்டகாச லீலைகள் 'ரிஷ்யசிருங்கரில்' நம்மை உணர்ச்சியின் சிகரத்துக்கே இழுத்துச் சென்றுவிட்டன. நாம் சகலத்தையும் மறந்து வசுந்தராவைக் காண்கிறோம் என்ற பரவசத்தில் பிரமாதமான ஆனந்தத்தில் திளைத்தோம். தற்போது தம் சொந்தப் படம் ஒன்றை வெளியிட முனைந்திருக்கிறார் வசுந்தரா. திருசங்கு ஸ்வர்க்கம்போல் நிற்கும் 'நாட்டிய ராணி'யில் மீண்டும் நடித்து அதை ஒரு நாட்டிய அற்புதமாக நமக்கு அளித்து நல்ல பெயர் வாங்க வேண்டும் என்பதே என் அவா.

நடித்தபடங்கள்: ரிஷ்யசிருங்கர், மங்கம்மா சபதம்.

நடித்துக்கொண்டிருக்கும் படங்கள்: தீபாவளி, நாட்டிய ராணி.

"வா, வா, என்று உங்களை நான் அழைக்கவில்லை" என்று இவர் 'மின்மினி'யில் கூறினாலும், அதோ அந்தக் கண்கள் விரிக்கும் மாய வலையில் எவர்தான் சாக்கி விழாமல் இருக்க முடியும். குறுகுறுப்பும், யௌவனமும், கட்டு மீறிய அழகும் பொங்கி வழியும் இவருடைய சௌந்தர்ய முகத்தை யாரால் மறக்க முடியும். ஆயிரம் கப்பல்களை ஆழ்கடலில் அன்று மகா அழகி ஹெலனின் சௌந்தர்யம் மிதிக்கவிட்டது என்றால், கோடிக்கணக்கான தமிழ் உள்ளங்களை ஆனந்த வெள்ளத்தில் மிதக்கவிடும் இவர் கண்கள் தான் என்ன, சாமான்யமா? சிட்டுக்குருவிபோல் அங்கும் இங்கும் தாவிஓடி, குத்துண்ட ஆசிரியனுக்கு பணிவிடைசெய்து அவன் மனதை மாற்றும்போது இவர் நடிப்பைப் பார்க்க ஆயிரம் கண்கள் வேண்டும். அலுப்பே ஏற்படாமல் நடிப்பை ரஸித்துக் கொண்டிருக்கலாம். பெயருக்கு பொருத்தமான இவர், பட உலகின் ராணியாக சிரஞ்சீவித்வம்பெற்று ஜ்வலிக்கப் போகிறார் என்பதை இப்போதே சொல்லி வைக்கிறேன்.

நடித்துக்கொண்டிருக்கும் படங்கள் : கங்கணம், மின்மினி.

வயது 20



சிந்தனை தோய்ந்த முகத்துடன் அதோ பக்கத்தில் காக்ஷி அளிக்கிறாரே, அவர் ஒரு கவி என்றோ, கனவு காணும் கலைஞன் என்றோ தவறாக நினைக்கவேண்டாம். 'மின்மினி'யில் உள்ளதை உள்ளபடி கூறும் ஒரு லக்ஷிய ஆசிரியனாக நடிக்கிறார். வசீகரமான தோற்றமும், தோற்றத்துக்கு ஏற்ற காம்பீர்யமும், காம்பீர்யத்துக்கு ஏற்ற உன்னத நடிப்பும் கொண்ட இவர், சினிமா வானில் தமக்கென்று நிரந்தரஸ்தானம் இலகுவில் பெற்றுவிடுவார் என்றே நம்புகிறேன். சமூகத்திலிருக்கும் ஊழல்களைத் திருத்தும் திருப்பணியில் தம் உடலுக்கு ஆபத்து ஏற்பட்டும், லக்ஷியத்தைக் கைவிடாத ஆசிரியர் பாத்திரத்தை உணர்ச்சியுடன் நடித்திருக்கிறார். 'கடகத்'தில் காக்ஷி அளித்துவிட்டு 'மின்மினி'யில் தம் மணியான நடிப்புக்கு மெருகு திட்டி, ஓரே எட்டில் நக்ஷத்திர பதவி அடைந்துவிட்டார். இளைஞர் ஆர்வத்துக்கு கேட்கவேண்டுமா?

நடித்தப்படம்: கடகம்.

நடித்துக்கொண்டிருக்கும் படங்கள்: பேசாமடந்தை, அம்பிகாதேவி, மின்மினி.

வயது 21.



சரோ

நடனம் ஆடத்தெரிந்தவர் நடிப்புக் கலையில் விரை யில் சோபிக்கலாம் என்பதற்கு ஜ்வலிக்கும் உதாரணம் பி. எஸ். ஸ்ரோஜா. எந்தக் கோணத்தில் படம் எடுக்கப்பட்டாலும் இவர் முகம் சுடர்விடுகிறது. பேச்சில் தென்படும் சிறு குறைகளை நடிப்பில் ஈடு கட்டுகிறார். நாட்டியப்புகழ் போலோநாத்துக்கு சகதர்மிணியான தால், நடனக் கலையில் நல்ல தேர்ச்சி பெற்றிருக்கிறார். முதலில் சில நடன சான்ஸ்கள் கிடைத்தன. டைரக்டர் கே. சுப்ரமண்யத்தின் பார்வை இவர் மீது விழவே சகடயோகம் சடசட வென்று ஆரம்பித்தது ஸரோஜாவுக்கு. 'விகடயோகி'யில் ஜமாய்த்துத் தள்ளினார். அதன் பின் 'தனஅமரா'வதியில் ஹீரோயின் பாகம் கிடைத்தது. மற்றும் 'பிரம்ம ரதம்' 'உஷா' போன்ற படங்களில் சான்ஸ் கிடைத்தது. 'விசித்திர வனிதா'வில் இவர் பிரமாதமாக நடித்திருக்கிறார். நக்ஷத்திரப் பதவியை இலகுவில் எய்திய ஸரோஜாவை இப்படத்தில் பார்க்கவேண்டும். சொந்த பங்களாவில் தன் குழந்தையுடன் கொஞ்சிக் குலாவும்போது, இவர் ஒரு நக்ஷத்திரம் என்ற எண்ணமே நமக்கு ஏற்படவில்லை. அத்தனை பற்று குடும்ப வாழ்க்கையில்.

நடித்தப்படங்கள். விகடயோகி, விசித்திரவனிதா, தன அமராவதி, பிரம்ம ரதம், உஷா.

வயது 21

ங்களம்

கூர்ந்து கவனிக்கிருரே, திரை உலகில்
ணவா இவர் பார்வை எதையோ ஊடுருவு
என்று நீங்கள் சந்தேகிக்கலாம் ஆனுல் பட
உலகில் பிரவேசிக்குமுன், நடனத்தில் ஒப்பற்ற புகழ் சம்பாதித்து, இந்தியா முழுதும் சென்று நடனமாடி கீர்த்தியை நிலைநாட்டிய மங்களம் மங்களகரமான வேளையில்தான் பட உலகில் பிரவேசித்திருக்கவேண்டும். நல்ல தேகக் கட்டு; கவர்ச்சிகரமான தோற்றம்; உள்ளத்தை கொள்ளைகொள்ளும் அங்கப்பூரிப்பு; இத்தனையும் படைத்த மங்களம் நட்சத்திரப் பதவியை மெதுவாகத்தான் அடைந்து வருகிருர். 'ருக்மாங்கதனி'ல் இவர் நடிப்பு மோசமில்லை என்று கூறும்படிதானிருந்தது. ஜுபிடர்லாரின் 'ஸ்ரீ முருகனில்' இவர் நடிப்பு சோபிக்கவில்லை. கண்ட பாத்திரங்களை ஏற்காமல், தம் நடனத்திறன் ஜ்வலிக்கும் சந்தர்ப்பம் அதிகம் அளிக்கும்படி பாத்திரத்தை தேர்ந்தெடுத்து, அந்தப் படத்தில் அரும்பாடுபட்டு உழைத்தால், நல்ல பெயரும் புகழும் இவருக்கு நிச்சயம் கிட்டும் இதை இவர் கவனிப்பாரா?

நடித்தபடங்கள்: ஜகதலப்ரதாபன், தமிழறியும் பெருமாள், ஹரிச்சந்திரா, மாயாமச்சந்திரா (தெலுங்கு) கர்ண (ஹிந்தி) ருக்மாங்கதன், ஸ்ரீ முருகன்.

நடித்துக்கொண்டிருக்கும் படம்: வேதாள உலகம்.

வயது 20

காஞ்சனா

ஜ்வலிக்கும் நக்ஷத்திரம் போல் பக்கத்தில் காக்ஷி அளிக்கிறாரே, அவருக்கு நக்ஷத்திர பொலிவு, இறக்கை போல் இப்பொழுதுதான் வளர்ந்து கொண்டிருக்கிறது. பதினெட்டு வயது கூட நிறம்பாத காஞ்சனா தன் சகோதரி மேனகா போல், 'மின்மினி'யில் மினுக்கி ரஸிகர்களை மயக்க, அருமையாக நடித்து வருகிறார். 'நக்ஷத்திரப் பதவி அடைந்து விட்டேன்' என்று கூறும் இவர் கண்களில்த் தான் எத்தனை குளுமை! முகத்தில் தான் எத்தனை வசீகரம். திரைக்குவந்த புது முகங்களில் எல்லோரையும் தூக்கி அடிக்கிறது இவருடைய மறக்கமுடியாத முகம். இவர் நடிக்கும்போது பார்க்கவேண்டுமே. எந்தப் பாத்திரத்தையும் பிரமாதமாக நடிப்பேன் என்று சொல்வதுபோலிருக்கிறது இவர் பேசும் அழகு. இருசகோதரிகள் வானவீதியில் இரட்டை நக்ஷத்திரங்களாக ஜ்வலிக்கப்போகும் அதிசயத்தை, நேயர்கள் விரைவில் காணும் நாள் வெகு தூரத்திலில்லை என்றே நான் கூறுவேன்.

நடித்துக்கொண்டிருக்கும் படங்கள்: கங்கணம், மின்மினி.

வயது 18

லீலா

'அவன் எழுத்தாளன் — 'நாடகம்'' என்று ரேடியோ அறிவிப்பாளர் கூறியதும், உட்கார்ந்திருக்கும் ஆசனத்தில் பின்னப்பட்டதுபோல் ரேடியோ ரஸிகர்கள் ஒருமணிநேரம் உலகத்தை மறந்து, சிரஞ்சீவி சிருஷ்டித்த கற்பனை உலகில் சஞ்சாரம் செய்தார்கள். "நடைபெற்றது 'அவன் எழுத்தாளன்' என்ற நாடகம்; எழுதியவர் சிரஞ்சீவி. இதில் பங்கெடுத்துக் கொண்டவர் லீலா.....' என்றவுடன், இத்தனை அற்புதமாக நடித்தாரே இந்தப் பெண் யார் என்று அறிய துடித்தேன். சங்கீதடைரக்டர் மகாதேவனின் மனைவி, சுகுமாரின் 'தேவதாசி'யில் பிரதம நடிகை என்று அறிந்ததும் அவரை நேரிலேயேகண்டு வந்தேன். எத்தனை தன்னடக்கம், எத்தனை பொறுமை, பேச்சில் எத்தனை லளிதம். சோகநடிப்பில் இவரை மிஞ்ச தென்னாட்டில் எவருமில்லை. இன்னும் பலபடங்களில் தோன்றி ரஸிகர்கள் மனதில் ஒரு பரபரப்பை ஏற்படுத்துவார் என்று நிச்சயம் கூறலாம். இவர் பேச்சு ஒவ்வொன்றும் நம் செவியில் சதா ஒலிக்கின்றன. வார்த்தைகள் உச்சரிப்பில் மற்ற நடிகைகள் இவரை பின்பற்றினால், படஉலகம் பிரமாதமாகி விடுமே!

நடித்தபடங்கள் : பக்த கௌரி, சுபத்ரா, சித்ரா, சுலோசனா, கடகம்.

நடித்துக்கொண்டிருக்கும் படம் : தேவதாசி.

வயது 16

ஜெயலக்ஷ்மி

ஒடிந்து விழுந்து விடுவதுபோல் தோற்றமளித்தாலும், ரஸிக கோடிகளின் உள்ளத்தை உடைப்பதில் தீவிர கவனம் செலுத்திய இவர் யார் என்று நான் சொல்லாமல் நீங்கள் தெரிந்துகொள்வீர்கள். 'நாம் இருவரி'ல் கண்ணம்மாவாகத் தோன்றி தமிழ் நாட்டிலேயே ஒரு பரபரப்பை ஏற்படுத்திய ஜெயலக்ஷ்மி தான் இவர். ஒரு படத்தின்மூலம் எந்த நடிகையும் இத்தனை அமோகமாக புகழை இதுவரை சம்பாதித்ததில்லை. இவரை திடீரென்று நக்ஷத்திர பதவிக்கு உயர்த்திய ஏ. வி. எம். துணிவே, இவருக்கு அமோகமான புகழை திடுதிப்பென்று சம்பாதித்துக் கொடுத்தது. 'நாம் இருவர்' பிரமாதபுகழ் அடைந்து, சென்ற இடமெல்லாம் ஜமாய்த்துக்கொண்டிருக்கிறது. இதில் எடுத்த எடுப்பிலேயே கதாநாயகியாகத் தோன்றியது மட்டுமல்லாமல், பிரபல நடிகர் டி. ஆர். மகாலிங்கத்தின் காதலியாக நடித்தும் விட்டார். இனி சகடயோகம்தான். தற்போது 'பிழைக்கும் வழி'யில் நடித்துக்கொண்டிருக்கிறார். தமக்கு கிட்டிய புகழை கட்டாயம் காப்பாற்றிக்கொள்வார் என்றே நம்புகிறேன்.

நடித்தபடங்கள் : நாம் இருவர், பைத்யக்காரன்.

நடித்துக்கொண்டிருக்கும் படம் : பிழைக்கும் வழி.

வயது 18

ஜெயலக்ஷ்மி

ஒடிந்து விழுந்து விடுவதுபோல் தோற்றமளித்தாலும், ரஸிக கோடிகளின் உள்ளத்தை உடைப்பதில் தீவிர கவனம் செலுத்திய இவர் யார் என்று நான் சொல்லாமல் நீங்கள் தெரிந்துகொள்வீர்கள். 'நாம் இருவரி'ல் கண்ணம்மாவாகத் தோன்றி தமிழ் நாட்டிலேயே ஒரு பரபரப்பை ஏற்படுத்திய ஜெயலக்ஷ்மி தான் இவர். ஒரு படத்தின் மூலம் எந்த நடிகையும் இத்தனை அமோகமாக புகழை இதுவரை சம்பாதித்ததில்லை. இவரை திடீரென்று நக்ஷத்திர பதவிக்கு உயர்த்திய ஏ. வி. எம். துணிவே, இவருக்கு அமோகமான புகழை திடுதிப்பென்று சம்பாதித்துக் கொடுத்தது. 'நாம் இருவர்' பிரமாதபுகழ் அடைந்து, சென்ற இடமெல்லாம் ஜமாய்த்துக்கொண்டிருக்கிறது. இதில் எடுத்த எடுப்பிலேயே கதாநாயகியாகத் தோன்றியது மட்டுமல்லாமல், பிரபல நடிகர் டி. ஆர். மகாலிங்கத்தின் காதலியாக நடித்தும் விட்டார். இனி சகடயோகம்தான். தற்போது 'பிழைக்கும் வழி'யில் நடித்துக்கொண்டிருக்கிறார். தமக்கு கிட்டிய புகழை கட்டாயம் காப்பாற்றிக்கொள்வார் என்றே நம்புகிறேன்.

நடித்தபடங்கள் : நாம் இருவர், பைத்யக்காரன்.

நடித்துக்கொண்டிருக்கும் படம் : பிழைக்கும் வழி.

வயது 18

விஜயகுமாரி

'மான் போன்ற விழியாள்' என்ற சொல்லை பெண்கள் மீது பிரயோகித்து நம்மை உணர்ச்சி ஸ்வர்க்கத்திற்கு எல்லைமீறியவர்ணனை மூலம் இழுத்துச் செல்லும் கதாசிரியர்கள்மீது எனக்கு இதுகாறும் ஒருகுறை இருந்தது. நான் தெருவில் எத்தனையோ பெண்களை பார்த்திருக்கிறேன். குறிப்பாக அவர்கள் கண்கள் மீது முக்கிய கவனம் செலுத்தியிருக்கிறேன். மான் விழிக்குப் பதிலாக, நாம் அனுதினமும் வாழ்க்கைப் பாதையில் சந்திக்கும் மிருகங்களின் கண்களின் நினைவு எனக்கு வருமேதவிர, கதாசிரியர் குறிப்பிடும் மான் விழிகள் மட்டும் அத்திப்பூ போல், என் பார்வைக்குத் தென்படாது. ஆனால் பக்கத்தில் எதையோ கவனிக்கும் இந்த யுவதி உண்மையிலேயே கவரிமான்தான் ஸ்திரி வேஷம்பூண்டு விட்டதோ என்று சந்தேகிக்கும்படி காக்ஷி அளிக்கிறாள். உண்மையிலேயே இவள்தான் மான்விழியாள். இந்த மான் விழியாளை எங்கிருந்து டி. பி சுந்தரம் பிடித்துக் கொண்டு வந்தோரோ நமக்குத் தெரியாது. இவருடைய குளிர்ந்த பார்வையையும் அபாரநடிப்பையும் 'மகாத்மா உதங்க'ரில் நாமும் காணும் பாக்கியம் கிட்டு விட்டது.

நடித்துக்கொண்டிருக்கும் படம்: மகாத்மா உதங்கர்.

வயது 21



சுந்தரி

'பேசும் பொற்சித்திரமே' என்று அமரகவி பாரதியார் குழந்தையை நோக்கி அழைத்ததும் எனக்கு இந்த அடி, கற்பனை சூடேறியபதம் என்றே தோன்றியது. ஆனால் 'தாய் நாட்டி'ல் இதோ பக்கத்தில் காக்ஷி அளிக்கும் சுந்தரியைப் பார்த்தவுடன் 'கவி கூறுவது உண்மை, உண்மை, எக்காலும் உண்மை' என்று வாய் விட்டு தியேட்டரில் அலறிவிட்டேன். ஒரு நடிகை நக்ஷத்திரப்பதவி அடைய எது முக்கியமாக வேண்டும்? நடிப்பா, தோற்றமா, நாட்டியமா, பாட்டா, என்று கேட்டால் அதோ பக்கத்தில் தோன்றும் சுந்தரியை (எத்தனை பொருத்தமான பெயர்) ஒரு முறை பார்த்தால், கொஞ்சம்கூட யோசிக்காமல் 'பேசும் கண்களே பேசும் படத்துக்கு வேண்டும்' என்று அடித்துக் கூறுவீர்கள். இந்த அழகிய புது முகத்தை 'தாய் நாட்'டின் கதாநாயகியாக பொறுக்கி எடுத்த அந்த மகா தைரியசாலி பாட்லிங் மணிக்கு தமிழ்நாடு என்றென்றும் கடமைப் பட்டிருக்கிறது. கொஞ்சும் கண்கள், உள்ளத்தைப் பதற அடிக்கும் அங்கபூரிப்பு, கிளிபோல் கொஞ்சிக் கொஞ்சிப் பேசும் சொற்கள் - இத்தனையும் படைத்த சுந்தரி எந்தப் பட முதலாளியின் மனதைத்தான் உருக்காமலிருப்பார்? நல்ல கீர்த்தியும் அமோக வெற்றியும் பெற இவர் தகுந்த பாத்திரம்.

நடித்தபடம் : தாய்நாடு.

கிருஷ்ணமூர்த்தி

சீவி விட்ட கிராப்பும், நறுக்கு மீசையும், மடிப்பு கலையாத டையும் பூண்டு இலேசாக புன்முறுவல் புரிகிறாரே, இவர் புகழேணியில் படிகளில் நிதானமாகவும் மெதுவாகவும் ஏறி வருவதை நேயர்கள் அறிவார்கள். அகில இந்திய ரேடியோ நிலையத்தில் கொஞ்ச காலம் வேலை பார்த்தார். 'என் மகனி'ல் தோன்றி நிரந்தரப்புகழ் அடையாவிட்டாலும், படஉலகில் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேற சந்தர்ப்பம் கிடைத்தது. கடைசியாக இவர் தோன்றிய படம் 'தியாகி.' இவர் நடிப்பில் அபிவிருத்தி கொஞ்சம் கூட தென்படா விட்டாலும், வார்த்தைகள் உச்சாடனத்தில் அதிக சிரத்தை எடுத்துக்கொண்டிருக்கிறார் என்பதை நாம் ஒருவாறு காணமுடிகிறது. நக்ஷத்திரபதவி அடைவது அத்தனை சாத்யமான காரியமல்ல: திறனும், முயற்சியும், ஆசையும் மட்டும் போதாது, ஏதோ ஒன்று மிகவும் அவசியம் என்று நாம் எல்லோரும் சொல்கிறோம் அல்லவா, அதற்குச் சிறந்த உதாரணம் இவர்!

நடித்தப்படங்கள் : என் மகன், ஏகநாத், தியாகி.

வயது 25

மாலதி

'ஓஸ்தாடே மா பாவா' என்ற பாட்டு 'சுமங்கலி' யில் பிரபலம் அடைந்த தருணத்தில்தான் மாலதியும் மளமளவென்று புகழேணியில் ஏறினார். புகழ்பெற்ற 'பாக்யலக்ஷ்மி'யில் நிஜ கிருஹலக்ஷ்மியாகவே நடித்து, அந்த சோக நாடகத்திற்கு ஜீவனளித்து ரஸிகர்களையும் கலங்கடித்துக் கண்ணீர் சொரிய வைத்தது இவருடைய நடிப்பு. எல்லூரைச்சேர்ந்த ஒரு பிரபல நகை வியாபாரியின் புத்திரியாக ஜனித்த மாலதி, சிறந்த கலாரஸிகரான ஸ்ரீ வீராச்சாரியை காதலித்து மணந்து கொண்டார். இவர்கள் காதல் மணத்துக்கு தடை ஏற்படாமலில்லை. இறுதியில் வெற்றி இவருக்கே கிடைத்தது. மாலதிக்கு நக்ஷத்திர பதவியை சூட்டியவர் வாஹினி ரெட்டியாகும். நாகைய்யா பார்வை இவருக்கு கிட்டவே, 'போதன'வில் பிரமாத புகழ் இவருக்கு கிட்டியது. ரொம்ப தமிழ்ப் படங்களில் நடித்து வருகிறார். காலையிலும், மாலையிலும் இவர் தம்பதி சமேதராய் ஈஸ்வரனுக்கு பக்தியைக் காணிக்கை செலுத்தத் தவறியதே கிடையாதாம். ஏறுமாறில்லாமல் புருஷனின் போக்குக்கு ஒன்றியிருந்து வாழ்க்கை நடத்தி, ஓழிந்த நேரத்தில் கலையில் அபிவிருத்தி காணும் வழிகளில் கவனம் செலுத்தி வருகிறார்.

நடித்தபடங்கள் : சுமங்கலி, பாக்யலக்ஷ்மி, போதன, மாயா மச்சீந்திரா, சுபத்ரா, ஸ்ரீ முருகன், ராஜகுமாரி.

வயது 23

பெரியநாயகி

'சிந்தை அறிந்து வாடி' என்ற பாட்டு, நாம் வள்ளிப் படத்தைப் பார்த்துக் கொண்டிருக்கையில் கணீர் என்று ஒலித்தவுடனே நாம் எல்லோரும் மெய் சிலிர்த்துப் போனோம். அந்தக் குரலிலிருக்கும் மதுரம் நம்மை எங்கேயோ இழுத்துக்கொண்டு சென்றது. நம்மை மெய்மறக்கச் செய்தது. இத்தனை உருக்க மான குரலை நாம் பேசும் பட உலகில் கேட்பதற்கு புண்ணியம் செய்தவர்கள் என்று நமக்குள்ளேயே சொல்லிக்கொண்டோம். இந்த உருக்கமான குரலின் சொந்தக்காரிதான் பெரியநாயகி; பெரிய பாடகி. தம் குரலை இரவல் கொடுக்கும் பணியை சற்று தேக்கி வைத்து, நடிக்கவும் துணிந்துவிட்டார். 'ருக்மாங்கதா' விலும், 'ஏகம்பவாணி'னிலும் கொஞ்சம் பெயர் கிடைத்தது. 'விசித்திரவனிதா'வில் தன்னால் நடிக்க முடியும் என்பதை நிரூபித்திருக்கிறார். இவர் இதில் பாடியிருக்கும் தேசீயகீதம் பிரமாதமாக அமைந் திருக்கிறது. முக எழில் என்பது லவலேசமும் தன் னிடம் பெற்றிராத பெரியநாயகி, முழுக்க முழுக்க சங்கீத படம் ஒன்றில் கதா நாயகியாக நடித்தால், அவ ருக்கு உண்மையிலேயே நக்ஷத்திரப்பதவி நிலைக்கலாம்.

நடித்தப்படங்கள் : ஊர்வசி காதல், தர்மவீரன், சிவலிங்கசாக்ஷி, சபாபதி, பிரபாவதி, ருக்மாங்கதா, ஏகம்பவாணன், விசித்திரவனிதா.

வயது 20

பேபி கமலா

பாகவதர் தோன்ருத படமும் படமா என்ற பேச்சு எங்கும் மறைந்து போய், கமலா ஆடாத படமும் படமா என்ற கேள்வி இப்போது நிலைத்து விட்டது. அம்புபோல் ஊடுருவிப் பாயும் விழிகளும், அங்க நெளிவில் பரவசத்தை இறைக்கும் ஒய்யாரமும், வெள்ளி ஏரிமீது நர்த்தனம் புரியும் சந்திர பிம்பம் போல் ஆடி, கண்டோர் எல்லோரையும் கிறுகிறுக்கச் செய்யும் கமலா இன்றைய சினிமா வானில் பிரமாதமாக ஜ்வலிக்கிருர். கமலா சினிமாவில் காலடி வைத்தது நம் தென்னிந்தியாவிலில்லை. 'கிஸ்மத்' என்ற படம் அமோக வெற்றி அடைந்தது. அதில் கமலாவின் சாமர்த்தியமும் வெளியாயிற்று. அடுத்த படியாக 'ராமராஜ்யா'வில் அற்புதமாக நடனமாடினுர். இச்சிறுமிக்கு அகில இந்திய புகழ் அடுத்தடுத்து கிட்டியது; இவர் முதலில் தோன்றிய தமிழ்ப்படம் 'ஜகதலப்பிரதாபன்'. 'ஸ்ரீவள்ளி' அமோக வெற்றி யடைந்ததின் காரணம் கமலாவின் இணையற்ற நாட்டியமும் நடிப்பும்தான். தமிழ் மக்களை தன் நாட்டியத்திறல் மயக்கி தன் கலைக்கு அடிமைகளாக்கினுர். 'நாம் இருவரில்' இவருடைய நாட்டியத்திறன் அதன் சிகரத்தை அடைந்தது இவர் அடைந்திருக்கும் அத்தனை புகழிலும் பெரும் பங்கு இவருக்கு நாட்டியம் கற்றுக்கொடுத்த வழுவூர் ராமய்யா பிள்ளைக்கு உண்டு.

நடித்தபடங்கள் : *ஹிந்தி ராம்ராஜ்யா, கிஸ்மத், ஜகதலப்ரதாபன், வள்ளி, நாம் இருவர், ஏகம்பவாணன், உதங்கர்.*

வயது 16

பாட்லிங் மணி

1934ம் வருஷம் சென்று இப்போது பதின்மூன்று வருஷங்களாகி விட்டன. இந்த பதின்மூன்று வருஷ காலத்தில் நாம் நூற்றுக் கணக்கான தமிழ்ப்படங்கள் பார்த்திருக்கிறோம். ஆனால் இவைகளில் பலவற்றை நாம் மறந்திருந்தாலும், 'மதருஸ் மெயில்' என்ற படத்தைமட்டும் நம்மில்ஒருவராலும் மறந்திருக்க முடியாது. நம்நினைவினின்றும் என்றென்றும் அழியாதபடி இந்தப் படம் இருப்பதற்கு மூலகாரணம் பாட்லிங் மணியின் மறக்கமுடியாத நடிப்பு. சினிமாவிற்காக கத்தி ஏந்திய மணி, நிஜமாக வாழ்க்கையில்கூட பீரங்கிகளையும் குண்டுகளையும் எதிர்த்து போர்க்களத்தில் சஞ்சரித்து தப்பியிருக்கிறார். படிப்பில் கவனம்செலுத்த முடியாத மணி, வடநாட்டுக்குப்போய், அங்கே பல படங்களுக்கு டைரக்டராக இருந்தார். கல்கத்தாவில் கேமராமேனாகவும் இருந்திருக்கிறார். சென்ற மகா யுத்தத்தில் பர்மா போர் முனையில் கேமரா நிருபராக அரியசேவை புரிந்திருக்கிறார். சமீபகாலத்தில், இவர் தமிழ்நாட்டுக்கு அளித்திருக்கும் 'தாய் நாடு' ஒரு விஷயத்தில் பிரமாத வெற்றி என்றே கூறவேண்டும். ஒரு உன்னத ஸ்டண்ட் படம் எப்படியிருக்கவேண்டும் என்பதற்கு 'தாய்நாடு' தலைசிறந்த உதாரணம்.

நடித்தபடங்கள்: மதருஸ் மெயில், ஹரிஜன சிங்கம், மிஸ் சுந்தரி, தாய்நாடு.

டி. ஆர். ஜீவரத்னம்

பத்து வருஷங்களுக்குமுன் சினிமா வானில் ஜ்வலித்துத்தான் தீருவேன் என்று ஒரு நக்ஷத்திரம் தானே உதயமானதை நீங்கள் நிச்சயம் கவனித்திருக்கமாட்டீர்கள். எந்தப் பாத்திரத்தையும் ஏற்றுக்கொண்டு, "இரவல் குரல்தானே வேண்டும், இதோ தானம் தருகிறேன்" என்று கொஞ்சம்கூட மனம் தளராமல் குரல் பிச்சை கொடுத்து எடுத்த காரியத்தில் வெற்றி அடைந்து விட்டார் ஜீவரத்னம். இவர் இன்று நக்ஷத்திர மண்டலத்தில் பிரத்யேக ஒளிவீசி ஜ்வலிக்கிறார் என்றால் இதில் பெரும் பங்கு சேலம் மாடர்ன் தியேட்டர்ஸாருக்கு உண்டு. இவரை எப்படியாவது நக்ஷத்திரமாக்குவது என்று கங்கணம்பூண்டு, வெற்றியும் அடைந்தார்கள். முதன் முதலில் இவர் பாட்டை நாம் கேட்டதும் வேதனை தோய்ந்த சந்தோஷத்துடன் வரவேற்றோம். ஆனால் நாளாக நாளாக வேதனை தேய்ந்து, அது காலிசெய்துவிட்டு சென்ற இடத்தை பரவசம் ஸ்வீகரித்துக்கொண்டு விட்டது. கர்ண கொடூரமாக இருந்த கானம் இன்று கர்ணாமிர்தமாக சோபிக்கிறது. இன்னும் சற்று கவனம் செலுத்தினால் பிரமாதமாக விளங்கலாம். டி. எஸ். வெங்கடசாமி என்பவரை மணந்துகொண்டு இவர் தம் பிறந்த ஊரான ஊஞ்சலூரில் வீடு கட்டிக்கொண்டு, தம் குழந்தையுடன் குதூகலமாகயிருக்கிறார். இவர் நடித்த படங்களில் சிறந்தது 'என் மகன்'.

நடித்தப்படங்கள்: சதி அகல்யா, பத்மஜோதி, தாயுமானவர், சந்தனத்தேவன், மாணிக்கவாசகர், சத்யவாணி, ராஜயோகம், பரசுராமர், உத்தம புத்ரன், பக்த கௌரி, கண்ணகி; பூம்பாவை, தேவகன்யா, சதி அருந்ததி, என் மகன், வால்மீகி, ஸ்ரீ முருகன்.

நடித்துக்கொண்டிருக்கும் படம்: ஆண்டாள்.

வயது 23.

சூர்யகுமாரி

"ஐயா, சிறு பெண் ஏழை என்பால் மனமிரங்காதா'' என்று பாட்டு உங்களை ரயில்ப் பிரயாணத்தின் போது மனதை உருக்கினால், உங்கள் நினைவில் சட்டென்று மற்றொரு காட்சியும் உதயமாகும். இந்தப் பாட்டை 'அதிர்ஷ்டம்' என்ற படத்தில் பாடி அதிக பிராபல்யம் அடைந்த டி. சூர்ய குமாரியின் நினைவு உங்களுக்கு உடனே வரும். ரஸிகர்களிடம் இரக்கத்தைச்சுறந்த இவர்மீது முதலாளிகளுக்கு சிக்கிரம் இரக்கம் ஏற்படவில்லை. தமது தாய் பாஷையான தெலுங்குப்படங்களில் நடித்துவிட்டு 'விப்ர நாராயணா' என்ற தமிழ்ப்படத்தில் நடித்தார். ஆனால் பாட்டுதான் சோபித்தது, நடித்த பாத்திரம் சோபிக்கவில்லை. இதன் பின் எம். கே. ராதாவுடன் நடித்த 'பிரேம பந்தனில்' இவருக்கு அதிக புகழ் கிட்டவில்லை. டைரக்டர் ஆசார்யாவின் 'கடகம்' இவருக்கு நல்ல பெயரையும் தேடிக்கொடுக்க முடியவில்லை. 'அதிர்ஷ்டம்' என்ற படத்தில் தமக்கு கிட்டிய அதிஷ்டம் இனி எந்தப்படத்தில் கிட்டப்போகிறது என்று ஏங்கும் இவர், நடிப்பில் அதிக கவனம் செலுத்தினால் ஒழிய நல்ல சான்ஸ் இனி பெறுவது கஷ்டம்.

நடித்தபடங்கள்: அதிருஷ்டம், ரயத்துபிட்டா, இல்லாளு, தேவதா, விப்ரநாராயணா, தீனபந்து, சந்திரஹாஸா, கிருஷ்ண பிரேமா, பிரேம பந்தன், கடகம்.

நடித்துக்கொண்டிருக்கும் படம்: சம்சார நௌகா.

கல்யாணி

இருக்கட்டுமா பறக்கட்டுமா என்று கேட்கும் மூக்குடனும், வெண்மையான கண் திரை நடுவே அப்படியும் இப்படியும் ஆடிக்கொண்டிருக்கும் இரு கரு விழிகள், இவைகளைப் பார்த்தவுடனேயே தெரியவில்லையா, குமாரி கல்யாணி என்று. தமிழ் தெரிந்த ஊர்களோடுமட்டும் இல்லாது டம்பாய், கன்னடா பெங்களூர், மைசூர் ஆகியஇதர பாஷா தேசங்களுக்கும் போய் பாடி ஆடி புகழ்பெற்றுவிட்ட கல்யாணி சினிமா உலகுக்கு புதியவரல்ல. இவர் பேபி கல்யாணியாக இருந்தபோது - அதாவது ஏழாவது வயதில்- ஜூபிடர் தயாரித்த 'அனாதைப் பெண்'ணில் தோன்றினார். பிறகு ஜெமினி 'பால நாகம்மா'விலும் புகுந்தார். இடையே நான்கு வருஷ ஓய்வுக்குப் பிறகு, தனது பனிரெண்டாவது வயதில் 'காரைக்கால் அம்மையார்' படத்தில் ஜூனியர் காரைக்காலம்மையாராக வந்தார். தொடர்ந்து 'சிவகவி' வந்தது. அதில் சந்திரனாகவந்து சாக்ஷி கூறியது இதே கல்யாணிதான் - நடனத்தில் அற்புத தேர்ச்சி பெற்றிருக்கும் இவர், சினிமாவில் பெயரும் புகழும் அடையவேண்டுமானால், 'ஜலஜா' போன்ற கதைகளில் தோன்றவேண்டும். அப்பொழுது நிச்சயம் இவர் முதல்தர நக்ஷத்திரமாவதுடன், நடனராணியாகவும் ஆகமுடியும்.

கே. ஆர். கல்யாணி

நவநாகரீக யுவதியாய் பூவும், புனஸ்காரமுமாய் காக்ஷியளிக்கும் இந்த நக்ஷத்திரம் மின்னுவதற்காக சினிமாவில் புகுந்திருக்கிறார். ஒரு நடிகைக்கு வேண்டிய லக்ஷணங்களுடன் தோற்றமளிக்கும் இவர் வெகு விரைவில் மின்னும் நக்ஷத்திரமாக ஜ்வலிக்க ஆரம்பித்தால் ஆச்சரியப்படாதீர்கள்.

ஒரு நடிகையாகவே இருந்து, நடிப்பதற்காகப் புகுந்திருப்பதால் இவரே வெகு எளிதில் நக்ஷத்திரமாக்கி விடலாம். அந்த முயற்சியை முடித்துவிடப் பார்க்கிறார் பூம்பாவை ராமசாமி.

என். எஸ். கே. நாடகசபையின் மூலம் ரஸிகர்களுக்கு அறிமுகமான கல்யாணி, மனோகரன் நாடகத்தின்போது மனோகரனாக வேஷமிட்டவரையே மனம் லயிக்கவைத்து நாடகத்தை நிஜமாக ஆக்கிக்கொண்டு விட்டார் இவர் கே. ஆர். ராமசாமியின் வாழ்க்கைத் துணைவி ஆகி.

ராமசாமி திரை உலகில் தனக்குக் கிடைத்த பாக்கியத்தை தன் சகதர்மிணிக்கும் பகிர்ந்தளிக்க முற்பட்டு விட்டார். அதன் பலன்தான் ராமசாமியுடன் மதுரைவீரனில் கல்யாணியும் நடிக்கிறார் என்ற வதந்தி.

இந்த வதந்தி நிஜமானால் நக்ஷத்திர தம்பதிகளுக்கு அமோக ஆதரவு கிடைக்கும்.

வஸந்தா

..முயற்சியும், சுய உழைப்பும் ஒருவருக்கு ..விட்டால் அவருக்கு வெற்றி நிச்சயம் உண்டு. ..பன்னிரெண்டு வருஷங்களுக்குமுன் டைரக்டர் சுப்ரமண்யத்தின் 'பவளக்கொடி'யில் ஒரு உபநடிக நடித்த கே. எல். வி. வஸந்தாவை நீங்கள் நிச்..யம் கவனித்தே இருக்கமாட்டீர்கள். அந்த சில்லரை வேஷத்தை வஸந்தாவுக்குக் கொடுத்த அந்த தீர்க்க தரிசியின் துணிச்சலைக்கண்டு எல்லோரும் அதிசயித்தார்கள். சுப்ரமண்யத்தின் கடாக்ஷத்தை அன்று பெற்ற வஸந்தா இன்று முன்னணி நக்ஷத்திரமாக ஜ்வலிக்கிறார். காரைக்குடிக்கு அருகே உள்ள குன்னக்குடியைச் சேர்ந்த வஸந்தா 'பவழக்கொடி'யில் பிரவேசித்த புண்ணிய வேளையில் பொறுமையுடன் பலபாத்திரங்களை ஏற்று, 'கந்த லீலா'வில் கதாநாயகியானார். இவருக்கு நக்ஷத்திரப்பதவியை அளித்த படம் 'ரம்பையின் காதல். 'சத்தியவாணி' 'பரசுராமர்' 'பூலோக ரம்பை' 'மதனகாமராஜன்' முதலிய படங்களில் கதாநாயகியாகத் தோன்றினார். ஆனால் புகழ் அதிகரிக்கவில்லை. இதன்பின் 'ராஜராஜேஸ்வரி' 'பர்மா ராணி' 'சாலிவாஹனன்' 'சுபத்ரா' 'பக்த ஹநுமான்' 'சித்ரா' முதலிய படங்களில் நடித்தாலும், நல்ல பெயர் எடுக்கும் வேளை இவருக்கு பிறக்கவில்லை. அழகு, கவர்ச்சி, பேச்சு சுத்தம், நடனத்திறன் இத்தனையும் அமோகமாகப் பெற்றிருக்கும் இவருக்கு நல்ல டைரக்டரின் கீழ் நடிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தால் பிரமாதமான புகழ் நிச்சயம் கிட்டலாம்.

நடித்தபடங்கள்: பவழக்கொடி, கந்தலீலா, ரம்பையின் காதல், சத்யவாணி, பரசுராமர், பூலோகரம்பை, மதனகாமராஜன், ராஜராஜேஸ்வரி, பர்மா ராணி, சாலிவாஹனன், சுபத்ரா, சுலோசனா, பக்த ஹனுமான், சித்ரா.

எஸ். பி. எல். தனலக்ஷ்மி

சினிமா நக்ஷத்திரங்களுக்குள்ளே அடக்கமும் ஒடுக்கமும் எவரிடம் அபரிமிதமாக இருக்கிறது என்ற கேள்வி பிறந்தால் எனக்கு உடனே தனலக்ஷ்மியின் ஞாபகம்தான் வருகிறது. தஞ்சாவூரைச் சேர்ந்த இவர் செல்வாக்கு மிகுந்த ஒரு சங்கீத குடும்பத்தில் பிறந்தவர். மிகவும் பிரபலமடைந்திருந்த சங்கீதம் குஜலாம்பாளின் ஐந்தாவது புத்திரி (கடைக்குட்டி) இவர். இவருடைய முதல்தமக்கை மகள்தான் சினிமா நடிகை டி. எஸ். தமயந்தி. இரண்டாவது தமக்கை மகள்தான் மயக்கு நக்ஷத்திரம் டி. ஆர். ராஜகுமாரி. உமையாள்புரம் கல்யாண ராமய்யரிடம் வாய்ப்பாட்டு கற்றுக்கொண்டு, தமது 13-வது வயதிலேயே கச்சேரி செய்யப் புறப்பட்டுவிட்டார். கதா காலக்ஷேபமும் கொஞ்ச காலம் செய்தார். இவருக்கு வீணையும் வாசிக்கத் தெரியும். பதின்மூன்று வருஷங்களுக்குமுன் 'பார்வதி கல்யாண'த்தில் நடிக்க முன் வந்த தனலக்ஷ்மி, 'வஸந்தஸேனா' 'காளமேகம்' 'தேசபக்தி' 'பிரபாவதி' முதலிய படங்களில் நடித்திருக்கிறார். இப்போது 'கிருஷ்ண பக்தி'யில் தோன்றுகிறார். சினிமாத் துறையில் தமக்கு அதிகப்புகழ் கிட்டாததால், இப்போது கச்சேரி செய்து வருவதில் முனைந்திருக்கிறார்.

நடித்தப்படங்கள்: பார்வதி கல்யாணம், வஸந்தஸேனா, சௌபாக்யவதி, காளமேகம், தேசபக்தி, பிரபாவதி.

நடித்துக்கொண்டிருக்கும் படம்: கிருஷ்ணபக்தி.

வயது 33.

பிரேமாவதி

சிலருக்கு பாடு படாமலே புகழ் அவர்களை துரத்திக்கொண்டு எப்போதும் வரும். சிலர் வெற்றிவேர்வையை சிந்தி அல்லும் பகலும் உழைப்பார்கள். ஆனால் வெற்றி என்பது அவர்களுக்கு கானல் நீராகவே விளங்கும். பின்னர் நான் குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவர் திருச்சூர் பிரேமாவதி. சினிமா உலகில் நுழைந்து பத்து வருஷங்களாகியும், நக்ஷத்திரப்பதவிபெற அரும்பாடுபடும் நடிகைகளில் இவரும் ஒருவர். 1937ம் ஆண்டில் கோலாப்பூர் ஸ்டுடியோவில் தயாரிக்கப்பட்ட விப்ரநாராயணவில் நடித்தார். 'சங்கராச்சாரியார்' 'மீனாக்ஷி கல்யாணம்' இரண்டிலும் படுதோல்வி அடைந்த பிரேமாவதி, ஹரிகதா காலக்ஷேபத்தில் ஈடுபட்டார். நடனமும் கற்றுக்கொண்டார். ஆர்வமும், சரீரகட்டும் கொண்ட பிரோமாவதி நாட்டியம் ஆடுவதில் வெகு விரைவில் பிராபல்யம் அடைந்தார். ஜுபிடர்ஸாரின் 'வித்யாபதியில்' டி. ஆ. ராமச்சந்திரனுடன் தோன்றி நல்ல பெயர் சம்பாதித்துக்கொண்டு விட்டார். சகடயோகம் ஆரம்பித்துவிட்டது. இனி வெற்றிக்குமேல் வெற்றிதான்.

நடித்தபடம் : *வித்யாபதி.*

நடித்துக்கொண்டிருக்கும் படங்கள் : *திருமழிசை ஆழ்வார், சம்சார நௌகா.*

வயது 26

Printed at
Sri Bharathi Press,
Choolai, Madras.
P. I. C. Ms. 18
Dated 12—11—1947.

22A 3-12 98

அழகிய ஆபரணங்களுக்கு

P.A. ராஜ செட்டியார் & பிரதர்

கோயமுத்தூர்

தந்தி: "ராஜா" · போன்: 268 · தபால் பெட்டி: 139